அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 20/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு 07
1994, யூன் மாதம் 15 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

அரசாங்க சேவையிலுள்ள கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு நிவாரணம் வழங்கலும் 1971க்கும் 1976க்கும் இடையே பட்டதாரிப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு நிவாரணம் வழங்கலும்.

1994, மே மாதம் 11ஆந் திகதியன்று அரசாங்கம் பின்வரும் சலுகைகளை அரசாங்க சேவையிலுள்ள கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. அதன்படி பின்வருமாறு இச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்:-

02. (அ) 1971க்கும் 1976க்கும் இடையில் ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிப் பயிற்சியாளர்கள் - 1994.06.01 முதல் சம்பள அளவுத் திட்டம் எஸ்-5-1 அதாவது ரூபா. 49,200-12X 1560 - ரூ. 72,600 இல் அவர்கட்குத் தனிப்பட்டதாகவும் தற்காலிக நடவடிக்கையாகவும், அவர்கள் பொருத்தமான பதவிகளில் தெரிவு செய்யப்படும் வரை வைக்கப்படுவர்.

(ஆ) (1) திட்டச் செயற்படுத்தல் அலுவலர்கள் பதவிகளுக்கும் அதையொத்த பதவிகளுக்கும் 1971க்கு முன்பு ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகள்;

(11) 1971க்கும் 1977க்கும் இடையில் பட்டதாரிப் பயிற்சித்திட்டத்திற்குப் புறத்தே ஆட்சேர்க்கப்பட்ட பட்டதாரிகள்;

(111) 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டதாரி பதவி வழங்கல் திட்டத்தில் ஆட்சேர்க்கப்பட்டு 15 ஆண்டுகட்கு மேற்பட்ட சேவையையுடைய பட்டதாரிகள்

அனைவரும் 1994.06.01 முதல் சம்பள அளவுத்திட்டம் எஸ்.-3-8, அதாவது ரூபா. 45,120-10 X 1200 - 57,120 இல் அவர்கட்குத் தனிப்பட்ட முறையில் உரித்துடையதாகவும் தற்காலிக நடவடிக்கையாகவும் அவர்கள் பொருத்தமான பதவிகளில் தெரிவு செய்யப்படும் வரை வைக்கப்படுவர்.

03. பதவிநிலைப் பதவிகளை வகிக்காதவர்களும், 1980.12.31க்கு முன்னர் எழுதுநர் அல்லது அதையொத்த சேவைகளில் ஆட்சேர்க்கப்பட்டவர்களுமான இக் கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு அவர்களுடைய தகைமைகளுக்குப் பொருந்தக் கூடிய வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்குக் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் கீழ் ஒரு விசேட வேலை வாய்ப்புத் திட்டம் அறிமுகப்படுத்தப்ப

04. 1970க்கும் 1982க்கும் இடையில் பட்டதாரிப் பயிற்சித்திட்டம், பட்டதாரி பதவி வழங்கல் திட்டம் ஆகியவற்றின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட பதவிகளுக்கென இக் கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு 50% வெற்றிடங்களை ஒதுக்கவும் அத்தகைய வேலை வாய்ப்புக்களை வழங்கும்போது அவர்கள் இப்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி, அல்லது பட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற திகதி இவற்றுள் எது பிந்தியதோ என்ற அடிப்படையில் அலுவலர்களின் முன்னுரிமை ஒழுங்கு தீர்மானிக்கப்படும்.

05. கீழுழைப்புப் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காக ஒழுங்குகள் செய்யப்படும்போது 1980, டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் ஆட்சேர்க்கப்பட்ட எழுதுநர் மற்றும் அதையொத்த சேவைகளிலுள்ள கீழுழைப்புப் பட்டதாரிகளின் விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்க.

ஒப்பம்: வை. பீ. புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.